DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 11 |
| Name | : | **திரு. ஜெயக்கண்ணன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **49/2026** |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது காளையார்கோவில் காவல்நிலையத்தில் சார்புஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.06.2024ம் தேதி நான் திருப்புவனம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது மதியம் சுமார் 4.00 மணியளவில் மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த திருப்புவனம் தாலுகா செல்லப்பனேந்தல் கிராமத்தை சேர்ந்த கண்ணன் மனைவி கடம்பவள்ளி என்பவரிடம் காயங்கள் குறித்து விசாரித்து அவர் கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவினை பெற்று நிலையம் திரும்பி புகார் மனுவின் அடிப்படையில் நிலையக்குற்ற எண்.295/2024 இதச பிரிவுகள் 294 பி, 307, 506(2)ன் கீழ் நான் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 7** ஆகும். பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நகலை விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளருக்கு விசாரணைக்கு உதவியாக இருந்தேன். வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. காயம்பட்டதாக சொல்லப்படும் கடம்பவள்ளி மட்டும் சிகிச்சையில் இருந்தாரா என்றால் நான் போகும்போது அவர் மட்டும் தான் இருந்தார். வேறு யாரும் அவருடன் சிகிச்சையில் இருந்தாரா என்றால் இல்லை. திருப்புவனம் அரசு மருத்துவமனை எங்களது காவல்நிலையம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். எங்களது காவல்நிலையத்திற்கு எதிரே திருப்புவனம் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு புகார்தாரர் சிகிச்சைக்கு சென்றிருந்தாரா என்றால் சென்றிருந்தார். திருப்புவனம் அரசு மருத்துவமனையிலிருந்து எங்கள் காவல்நிலையத்திற்கு தகவல் வந்ததா என்றால் வரவில்லை.

2. மதுரை வேலம்மாள் மருத்துவமனையிலிருந்து எனக்கு தகவல் வருவதற்கு முன்பு ஆஜர் எதிரி வழக்கின் கண்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரை மற்றும் பார்த்தசாரதி, சந்தோஷ் மீது அவர்கள் தன்னை வீடேறி தாக்கவந்தார்கள் என்று எதிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாரா என்றால் கொடுத்திருந்தார். மதுரை வேலம்மாள் மருத்துவமனையிலிருந்து எனக்கு தகவல் வருவதற்கு முன்பு அ.சா.1 கடம்பவள்ளியின் தங்கையான அ.சா.2 அழகுநித்யா என்பவர் எங்கள் காவல்நிலையத்தில் புகார கொடுத்திருந்தாரா என்றால் கொடுக்கவில்லை. அந்த புகாரின்பேரில் நானும், ஆய்வாளரும் திருப்புவனத்தில் உள்ள சம்பவயிடத்திற்கு சென்று அ.சா.1 கடம்பவள்ளி, அ.சா.,2 அழகுநித்யா, அ.சா.8 மல்லிகா ஆகியோர்களை விசாரித்து அவர்கள் மூவரிடமும் கையொப்பம் வாங்கினேன் என்றால் சரிதான் சாட்சி மீண்டும் சரியல்ல என்று கூறுகிறார்.

3. மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு செல்லவுமில்லை அ.சா.1 கடம்பவள்ளியிடம் புகாரும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1 கடம்பவள்ளியிடம் பெற்றதாக கூறப்படும் புகார் இந்த வழக்கின் முதல் தகவல் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு முன்பே எதிரி ஒரு புகாரும், அ.சா.,2 ஒரு புகாரும் இந்த சம்பவம் சம்மந்தமாக புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவை இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. ஆண்டிச்சாமி என்ற போலிசாரின் துாண்டுதலின்பேரில் நான் சொன்ன புகார் பின்னிட்டு தயார் செய்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை**:

சம்பவயிடத்திற்கு சென்று அ.சா.1 கடம்பவள்ளி மற்றும் அ.சா.2 அழகுநித்யா, அ.சா.8 மல்லிகா ஆகியோர்களிடம் நான் கையொப்பம் வாங்கியதாக நான் ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் மறு விசாரணை**:

என்னை ஆய்வாளர் என்றைய தேதியில் விசாரித்தார் என்றால் 23.06.2024 ம் தேதி விசாரித்தார். எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் மாலை சுமார் 6.00 மணியிருக்கும் . நான் சம்பவயிடத்தில் அ.சா.1 கடம்பவள்ளி மற்றும் அ.சா.2 அழகுநித்யா, அ.சா.8 மல்லிகா ஆகியோர்களிடம் நான் கையொப்பம் வாங்கியதாக ஆய்வாளரிடம் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றாலும் வாக்குமூலத்தில் குறிப்பிடாமல் மறைக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.16 17:03:09 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை..**